# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண்.05/2018**

பெயர்:**சின்னராஜ்** நாள்: 28.07.2025

வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – சின்னராஜ் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.50</u>

இந்த வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்கள் அனைத்தும் எனது தாத்தா சித்தன் என்பவருடைய பூர்வீக சொத்து என்றால், ஆமாம். எனது தாத்தா சித்தன் 1975-ம் ஆண்டு தாவா சொத்து மற்றும் இதர சொத்துகள் குறித்து எந்த ஒரு ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்து விட்டார் என்றால், ஆமாம். எனது பாட்டி பாவாயி இறந்து சுமார் எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால், சுமார் 30 ஆண்டுகள் இருக்கும். 8-ம் பிரதிவாதி அருணாசலம் எனது உடன் பிறந்த சகோதரர் என்றால், ஆமாம். எனது தாத்தா சித்தனுக்கு பெருமாள், பெரியண்ணன், கோனேரி என்று 3 மகன்கள் உள்ளார்களா என்றால், ஆமாம். தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் எனது தாத்தா மற்றும் அவருடைய மகன்கள் மூவரும் கூட்டாக தான் அனுபவித்து வந்தார்களா என்றால், ஆமாம். எனது தாத்தாவின் 3 மகன்களும் தாவா சொத்து மற்றும் இதர சொத்துகளை வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டார்களா என்றால், ஆமாம். எனது பெரியப்பா பெருமாள் திருமணம் ஆகாமல் எனது தகப்பனாருடன் வசித்து வந்தாரா என்றால், ஆமாம். எனது பெரியப்பா பெருமாள் 03.08.1992-தேதியன்று அவருக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தும் மற்ற இதர சொத்துக்களில் 3-ல் 1 பங்கு எனது தகப்பனாருக்கு உயில் எழுதி வைத்தாரா என்றால், ஆமாம். எனது பெரியப்பா பெருமாள் 10.08.1994-ம் ஆண்டு இறந்து விட்டாரா என்றால், ஆமாம். அதற்கு பின்னிட்டு தாவா சொத்து மற்றும் இதர சொத்துகளை எனது தகப்பனார், நான் மற்றும் 8-ம் பிரதிவாதி கூட்டாக அனுபவித்து வந்தோமா என்றால், ஆமாம். சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.3/2017-ல் பாகப்பிரிவினை வழக்கை எனது தகப்பனார் மற்றும் 8-ம் பிரதிவாதி மீது தாக்கல் செய்தேனா என்றால், ஆமாம். அந்த வழக்கில் C ஷெட்டியூல் சொத்துகள் எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்டதா என்றால், ஆமாம். அந்த C ஷெட்டியூல் சொத்துகள் இந்த வழக்கின் தாவா சொத்துகளா என்றால்,

ஆமாம். எனது சிறுவயதிலிருந்து நான் தனியாக தான் வாழ்ந்து வருகிறேன் என்றால், ஆமாம்.

8-ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் .12.00

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.07.28 13:09:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.